RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s1020

OPEN ACCESS

# என். எஸ். கிருஷ்ணன் பாடல்கள் காட்டும் விளிம்புநிலை சமுதாயம்

ரா. ஸ்டீபன் பொன்னையா [அ, *]

[அ] தமிழ்த்துறை, தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை- 626101, தமிழ்நாடு, இந்தியா.

# Marginal Society Depicted in Krishnan's Songs

R. Stephen Ponniah [a, *]

[a] Department of Tamil, Devangar Arts College, Aruppukkottai-626101, Tamil Nadu, India.

* Corresponding Author: drstephenponniah@gmail.com

Received: 28-09-2021
Revised: 29-05-2022
Accepted: 04-06-2022
Published: 12-08-2022

Check for updates

**ABSTRACT**

Food, clothing, and shelter, which are considered essential human needs, are still not available to all. People who do not get all these are considered lower class people, marginal people, and common people. They are still living above a certain percentage of the society we live in. Creators who express their lives through nature, music, and drama are found in literature in various languages. Today, their lives are shared through the media. Among these media, the film industry is considered important. The purpose of this article is to explore the lives of marginalised people through the soundtracks featured in these films. Through screen songs, Pattukottai Kalyanasundaram, NS Krishnan, Kannadasan, and Vairamuthu were among those who created works to let the layman know the life of the common people. One of them was NS Krishnan, who was born on November 29, 1908, to Sudalaiyandi-Ishakiyammal from a small village near Nagercoil in the Kanyakumari district. The primary sources for this study are the songs composed for the film by NS Krishnan, who has expressed himself on various platforms as a theatre actor, film actor, and lyricist. He was the one who recorded the lives of the lower-class people as they were without fear of bureaucracy. He was known to be a left-wing thinker. Their works sounded like film songs as the voices of the working people who toiled all day long were not met. This analysis will be done by dividing the ideas contained in these songs into three parts, namely food, clothing, and shelter.

**Keywords:** Introduction, Marginalized Society, Reason for Marginalization, Marginalized People Fighting for Food, Ordinary Nostalgia for Clothing

## முன்னுரை

இசை மனிதனைத் தன்வயப்படுத்தக்கூடியது. இசையின் வழியாகச் சொல்லப்படும் கருத்துக்கள் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களையும், கல்வி அறிவில்லாத பாமர மக்களையும் எளிதில் சென்றடைகிறது. திரையில் காட்சிப்படுத்தப்பட்ட பிம்பங்கள் வழியாக வெளிப்படும் இசைப்பாடல்களே திரையிசைப்பாடல்கள் ஆகும். இப்பாடல்களுக்கு என். எஸ். கிருஷ்ணன் தன் படைப்பாற்றல் மூலம் வலிமை சேர்த்தார். இவர்தம் படைப்புகளில் வெளிப்படும் எளிய மக்களின் வாழ்வியலை இக்கட்டுரையில் காண்போம்.

## விளிம்புநிலை சமுதாயம்

நாம் வாழும் சமூகத்தில் உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலையில் பொருளாதார ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களே விளிம்புநிலை

சமுதாயமெனக் கருதப்படுகின்றனர். இவர்களே அடித்தள மக்களென்றும், சாமானிய மக்களென்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களின் வாழ்வு உயர்த்தபட வேண்டுமானால், உழைப்பை மட்டுமே மூலதனமாக வைத்து வாழ்வோடு போராடும் இவர்களின் உழைப்பு சுரண்டப்படும் நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

## விளிம்புநிலைக்கான காரணம்

நாம் வாழும் சமூகத்தில் அடித்தட்டு மக்களின் வாழ்வு சீரடைய வேண்டுமானால், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற சமதர்ம சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், மேல்த்தட்டு வர்க்கமோ அடித்தட்டு மக்கள் ஒருபோதும் உயர்ந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தோடு அவர்களை எப்போதும் மதுவின் மயக்கத்தில் வைத்திருக்க விரும்புகின்றனர். மதுவுக்கு அடிமையான மனிதன் வேறு எதையும் சிந்திக்க மாட்டான். அவனை எப்போதும் மதுவின் மயக்கத்தில் வைத்திருக்கின்ற மேல்த்தட்டு மக்களின் அடிமையாகவே அவன் மாறி விடுகின்றான். இன்று நம் சமூகம் சந்திக்கின்ற அவலங்களில் ஒன்றாகக் கருதப்படுவது மனிதன் மதுவுக்கு அடிமையாதல் ஆகும். ஆண்களில் 42 சதவீதம்பேர் இன்று குடிக்கு அடிமையாகி உள்ளனர். அவர்களில் பெரும்பான்மையோனோர் அன்றாட உணவுக்காகப் போராடுகின்ற அடித்தட்டு மக்களாக உள்ளனர். அவர்கள் மதுவின் தேவைக்காக தன்னுடைய குடும்ப வாழ்க்கையை சீரழிப்பதோடு மட்டுமில்லாமல், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடவும் செய்கின்றனர். மதுப்பழக்கமே சமூகவிரோதச் செயல்களுக்குக் காரணமாக அமைகின்றன என்பதையும், மது இல்லாத சமுதாயத்தில் சமூகவிரோதச் செயல்கள் குறைவதையும், மனிதன் புத்தியுள்ளவனாக மாறுகின்றான் என்பதையும்,

“குடிகெடுத்த குடியொழிஞ்சுது

அடிதடி சண்டையும் அதுகொறைஞ்சது

ஆணும் பெண்ணும் புத்தியறிஞ்சது எங்கநாட்லே”

என்ற பாடல் வரிகள் வழி அறியமுடிகின்றன (Aranthai Narayanan, 2009).

விளிம்புநிலையில் வாழும் மீனவமக்கள் குடிக்கு அடிமையாகித் தங்களை வருத்திக்கொள்ளும் நிலையை,

“குடிக்கக்காசு கெடக்குதுன்னு

துடிச்சுக்குன்னு ஓடிப்போயி

புடிச்சு இழுத்தேன் கையால கடவுளே -இப்ப

புச்சுக்குட்டு தொங்குதடா கடவுளே”

என்ற வரிகள் மதுவின்மீது இருக்கக்கூடிய மோகத்தின் காரணமாக ஆபத்தான மீனாக இருந்தாலும் அதைப்பிடிக்க முற்பட்டு கையை இழந்து வாடும் மீனவனின் நிலையையும், மதுவிற்கு அடிமையானவன் தன்னை வருத்திக்கொண்டாவது அதைப் பெறுவதற்கு தயங்கமாட்டான் என்பதையும் வெளிப்படுத்துகின்றன (Krishanan, 1940). மது போன்ற பழக்கங்களுக்கு அடிமையான மக்கள் உழைப்பவர்களாக இருந்தாலும் அவர்களின் உழைப்பு வீணாகின்றது. சிந்தனை மழுங்கடிக்கப்பட்டவர்களாக உழைப்பின் பலனை இழந்துவிடுகின்றனர். எனவே, வாழ்வதற்கான வழி தெரியாதவர்களாக தொடர்ந்து விளிம்புநிலை மக்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறியமுடிகின்றது.

## உணவுக்காகப் போராடும் விளிம்புநிலை மக்கள்

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதருக்கும் வயிற்றுக்குச் சோறிட வேண்டியது அவன் சார்ந்து நிற்கின்ற மனித சமுதாயத்தின் கடமை என்பதை,

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு

வாழும்மனிதருக்கு"

என்று மகாகவி பாரதி பாடினான் (Chandrakanthan 1998). அந்த ஒரு சாண் வயிற்றுக்காக உழைக்கும் மீனவன் கடலோடும், வாழ்வோடும் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான் என்கிற நிலையை,

"இன்னிக்கு காலையில எந்திரிச்சி கஞ்சித்தண்ணி

இல்லாமலே கஷ்டப்படுகுறேன் கடவுளே!

கொஞ்சம் கண்ணத் தொறந்து

பாறேன் கடவுளே! என்ன

இப்பிறப்பு பிறக்கவச்சியே கடவுளே!"

என்ற வரிகள் பசியோடு உழைக்கச் செல்லும் அவன் தன் வாழ்வு சிறப்பதற்குக் கடவுள் அருள்புரிய வேண்டுமென உரிமையோடு வேண்டுவதையும், தன்னுடைய இந்த நிலைக்குக் காரணம் கடவுளே எனக்கூறும் அவனது ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகின்றன (Aranthai Narayanan, 2009).

மீனவன் தன் குடும்பத்தை வாழ வைப்பதற்காக ஒவ்வொரு நாளும் உயிரைப் பணயம் வைத்துக் கடலுக்குள் செல்கிறான். கடலுக்குள் சென்றவன் ஒருநாள் காணாமல் போய்விடுகிறான். சென்றவன் திரும்பாத நிலையில் குடும்பம் பரிதவிக்கும் நிலையையும், அவன் உடன் பிறந்தவனின் உள்ளத்து உணர்வுகளையும்,

"கட்டுமரம் கட்டிக்கிட்டு

கயிறு வலை எடுத்துக்கிட்டு

கடலுமேல போனானே கடவுளே!

பொண்டாட்டி புள்ள குட்டி

பிழைக்க என்ன செய்வாங்களோ?

புயல்காற்று வந்ததாலே கடவுளே - அவன்

போனவன் திரும்பலயே கடவுளே!"

என்ற பாடல் வரிகளின் வழியாகப் படம்பிடித்துக் காட்டியவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் (Aranthai Narayanan, 2009).

## உடையின் மீதான சாமானியனின் ஏக்கம்

ஆதிமனிதன் தான் நிர்வாணியாய் இருக்கிறேன் என்று தன்னை அறிந்த நாளில் இருந்து ஆடை என்பது அவனுடைய வாழ்வில் அவசியத் தேவையாக மாறியது. 'ஆள்பாதி ஆடைபாதி' மற்றும் 'ஆடையில்லா மனிதன் அரைமனிதன்' என்ற வாக்கியங்கள் ஆடையின் சிறப்பை எடுத்துக்கூறும் ஆன்றோர் மொழியாகும். ஆடை மனிதனின் புறத்தோற்றத்தைத் தீர்மானிக்கக்கூடிய கருவியாக மாறியுள்ளது. இன்று, வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் ஆட்களைத் தேர்வு செய்யும்போது, அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகள் மூலம் அவர்களின் குணங்களைத் தீர்மானிக்கின்றனர். சில சமுதாயமக்களிடம் திருமணத்திற்கு எடுத்த பட்டாடைகளையே மனிதன் இறக்கும்போதும் அவனுக்கு அணிவிக்கக்கூடிய வழக்கம் உள்ளதையும் அறியமுடிகிறது. இவ்வளவு சிறப்புக்களை உடைய ஆடை நாம் வாழும் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் அவரவர் விருப்பத்தின்படி கிடைப்பதில்லை. அடித்தட்டு மக்கள் விரும்பிய ஆடைக்காக ஏங்கும் நிலை இன்றும் சமுதாயத்தில் நிலவிவருவதை,

"ஐம்பதுருபாய் சம்பளக்காரன் பொஞ்சாதி

தினம் ஒன்பது தடைவ காப்பிகுடிப்பது அநீதி

எண்பது ரூபாய் புடவை கேட்டா

குடும்பத்துக்கே விரோதி”

என்ற பாடல் வரிகளில் உணர்த்துவதோடு, குறைவான வருமானம் உடைய ஆண்மகன் தன் மனைவியின் ஏக்கத்தைத் தீர்த்துவைக்க முடியாத நிலையையும் வெளிப்படுத்துகின்றன (Krishanan, 1955).

சாமானிய மனிதர்களின் வாழ்வில் திருமணத்தின்போது மட்டுமே கிடைக்கும் பட்டுப் புடவையும், பட்டு வேட்டியும் அவர்களின் வாழ்நாள் கனவாகும். அந்தக் கனவு ஆடைகளில் உள்ள வெள்ளிச்சரிகை மறுவிலைக்கு போகக்கூடியது. வாழ்வின் தவிர்க்க முடியாத தருணங்களில் அந்தப் பட்டாடைகளையும் விற்கும் நிலைக்கு ஆளாகும் சாமானிய மக்களின் நிலையை,

“வெள்ளிச் சரிகை வேட்டி சேலை கொடுத்து

எவர்சில்வர் வெங்கலப் பாத்திரம் வாங்குவதைத் தடுத்து

புருஷன் விலை மதிப்பை எடுத்துச் சொன்னால்

அவள் முகத்தைச் சுழித்து”

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன (Krishanan, 1955). மேலும், பட்டாடைகளில் உள்ள வெள்ளிச்சரிகை விலை உயர்ந்தது என்பதை எடுத்துக் கூறி அவற்றை விற்கவேண்டாம் எனக் கணவன் தன் மனைவிக்குத் தரும் ஆலோசனையையும் அறியமுடிகிறது.

## உறைவிடத்திற்கு ஏங்கும் விளிம்புநிலை மக்கள்

நாடோடியாக வாழ்ந்த மனிதன் இயற்கை மற்றும் அச்சம் தரும் விலங்குகளிடமிருந்தும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள குகைகளிலும், புதர்களிலும் வாழத் தொடங்கினான். ஒரு குறிப்பிட்ட பருவகாலத்திற்கு ஒரே இடத்தில் வாழத் தொடங்கிய மனிதன் கூடாரவாசியாக மாறினான். பருவங்கள் மாறியபோது கூடாரங்களைப் பெயர்த்துக்கொண்டு வாழ்விடத்தை மாற்றிக்கொண்டான். நிலத்தின்மீது உரிமை கொண்டாடத் தொடங்கிய மனிதன் தன் வாழ்விடத்தை நிரந்தரமாக்கிக் கொண்டான். எனவே, நிரந்தரமான உறைவிடங்களையும் ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்ததன் விளைவாக, அவற்றை பல்வேறு வடிவங்களில் கட்டமைத்தான். சொந்தமாக நிலம் உடையவனுக்கு மட்டுமே அந்த வாய்ப்பு கிட்டியது. மனிதனின் பொருளாதாரமே அவர்களின் இருப்பிடத்தைத் தீர்மானித்தது. நாம் வாழும் சமூகத்தில் வீடுகளற்ற ஏழைகள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். “மும்பை, சென்னை, கல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர், கான்பூர் என ஆறு நகரங்களில் மட்டும் இருக்கும் சாலைவாழ் சிறார்கள்: 1,14,700” என்று ஓர் ஆய்வு குறிப்பிடுகிறது (Ibrahim, 2014). இவர்களில் டெல்லியில் மட்டும் ஒருலட்சம் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் பெற்றோர்களுடன் இணைந்து சாலைகளில் வாழ்வோர் எனவும், உறவுகள் யாருமற்ற அனாதைகளாகச் சாலைகளில் வாழ்வோர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளனர். மனிதன் தன்வாழ்வின் தேவைக்காக மனைவி பிள்ளைகளோடு குடும்பமாக, பெருநகரங்களின் நடைபாதைகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையை நம்மால் இன்றும் காணமுடிகிறது. இந்த அவலங்களிலிருந்து தன்னைத்தானே மீட்டெடுக்க விரும்பும் மனிதனுக்கு பணம் அவசியமான ஒன்றாக அமைகிறது.

வாழ்வின் அவலங்களைச் சகித்துக்கொண்டு பணத்தைத் தேடுவதற்கு அவன் நித்தம் நித்தம் முயற்சி செய்த போதிலும் எளியவர்களின் கைகளுக்கு அவை எளிதில் வந்துவிடுவதில்லை. மனிதனின் உழைப்பு சகமனிதனால் சுரண்டப்படுகிறது. அவனது உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் இல்லாத நிலையில்,

“எங்கே தேடுவேன் எங்கே தேடுவேன்?

உலகம் செழிக்க உதவும் பணத்தை

எங்கே தேடுவன்?"

என்று ஏங்கித் தவிக்கின்றான் (Krishanan, 1955). தான்தேடும் பணம் எங்கே இருக்கிறது என்பதை,

"தேர்தலில் சேர்ந்து தேய்ந்து போனாயோ?

தேக சுகத்துக்காக ஊட்டி சென்றாயோ?

சுவற்றுக்குள் தங்கமாய்ப் பதுங்கிவிட்டாயோ?

தூடஞ்சாம்பிராணியாய்ப் புகைந்து போனாயோ?"

என்று சாமானியனின் குரலாக என். எஸ். கிருஷ்ணன் கேள்வி எழுப்புவதன் வழியாக, பணம் வசதி படைத்தவர்களின் வீடுகளில் முடங்கிக் கிடக்கிறது என்பதை வெளிப்படுத்துகின்றார் (Krishanan, 1955). பணம் படைத்தவர்களில் பெரும்பான்மையான மனிதர்கள் கஞ்சனாகவும், ஊதாரியாகவும் வாழ்வதால் அவனிடமிருக்கும் பணத்தால் எளியவர்களுக்கு பயனேதுமில்லை என்பதை,

"கருப்பு மார்க்கெட்டில் கலங்குகின்றாயோ?

கஞ்சன் கையிலே சிக்கிக்கொண்டாயோ?

கிண்டி ரேசில் சுத்திக் கிறுகிறுத்தாயோ?"

என்ற வரிகள் வழியாக வெளிப்படுத்துகின்றார் (Krishanan, 1955). இதே கருத்தைக் கவிஞர் வாலி அவர்களும்,

"கிடைத்தவர்கள் பிரித்துக் கொண்டார்

உழைப்பவர்கள் தெருவில் நின்றார்

பலர் வாட வாட சிலர் வாழ வாழ

ஒருபோதும் தெய்வம் கொடுத்ததில்லை"

என்ற வரிகளின் வழியாக வெளிப்படுத்துகின்றார் (Vairavan, 2012). ஏமாற்றுக்காரர்கள் கையிலும், கஞ்சர்கள் கையிலும் பணம் சிக்கிக் கொண்ட நிலையில் உழைப்பவர்கள் உறைவிடமில்லாமல் தெருவில் தள்ளப்பட்டு உள்ளார்கள். இந்நிலை மாறவேண்டுமானால் வேலைக்கான உத்திரவாதமும், அவன் செய்யும் வேலைக்கான ஊதியமும் தேவை என்பதை,

"பண்ணிய வேலைக்குப் பலன் தருவது ஒண்ணிலே

தேதி ஒண்ணிலே - மனுஷன்

படாதபாடு படுவது இருபத்தொண்ணிலே

முன்னே பட்ட கடனைத் தீர்ப்பான் தேதி ஒண்ணிலே"

என்ற பாடல் வரிகளில் விளக்குகின்றார் (Krishanan, 1955). வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும்போது கடன் பெற்றாவது மனிதன் தன் வாழ்வின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியும் என்பதையும் தனக்கே உரிய நகைச்சுவையோடு வெளிப்படுத்துகின்றார்.

## முடிவுரை

இவ்ஆய்வு அடித்தட்டு மக்களின் விளிம்புநிலைக்கான காரணத்தை உணர்த்தியதோடு, அம்மக்கள் முன்னேறுவதற்கான வழிகளையும் உணர்த்தியுள்ளது. வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்காக அவர்கள் படும் ஏக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளது. என். எஸ். கிருஷ்ணனின் பாடல்களைப் போன்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார், கண்ணதாசன் போன்ற கவிஞர்களின் படைப்புகளும் அடித்தட்டு மக்களின் வாழ்வியலைப் பேசுவதால் அவர்களுடைய படைப்புகளையும் தரவுகளாக எடுத்துக்கொண்டு ஆய்வுகள் மேற்கொள்வதற்கு இக்கட்டுரை வழிவகை செய்துள்ளது.

## References

Aranthai Narayanan, (2009) Naagariga Komaali, New Century Book House, Chennai, India.

Chandrakanthan, (1998) Bharadhiyar Kavidhaigal, New Century Book House, Chennai, India.

Ibrahim, P., (2014) Pudhukavithaikal Kattum Samuthaiya Sinthanaikal, Dr. Zakir Hussain College Ilayangudi, Chennai, India.

Krishanan, N.S., (1940) Movie Songs book, Chennai, India.

Krishanan, N.S., (1949) Movie Songs book, Chennai, India.

Krishanan, N.S., (1955) Movie Songs book, Chennai, India.

Vairavan, S., (2012) Vaali 1000 Screen Music Songs, Kumaran pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License